DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.306/2025**

Prosecution **PW.3**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | சரவணன் | கிராமம் : | |
| அப்பா பெயர் : | கண்ணன் | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 30 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.03.2026
எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம் வளையார்பாளையத்தில் குடியிருந்து வெல்டர் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மகேஷ்வரி எனது மாமனாரின் தம்பி மனைவி ஆகும். அ.சா.2 ராஜேந்திரன் எனது மாமனாரின் தம்பி யாகும். ஆஜர் எதிரியைத் தெரியயும் எனது மாமா முறையாகும். 10.01.2023 ம் தேதி காலை 11.00 மணிக்குபொய்க்கைபுதூர் சுடுகாடு அருகே நிலத்திற்கு வேலை செய்வதற்காக நானும், ரவி, அ.சா.1, அ.சா.2, சுப்பிரமணி ஆகியோர்கள் சென்று சுத்தம் கொண்டிருந்தோம்.

2. நான் கிழக்கு பக்கமாக வேலை செய்து கொண்டிருந்தேன். அப்போது ஆஜர் எதிரி சத்தம்போட்டார். அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்று நான் கவனித்து கொண்டிருந்தேன். எனது மாமனார் ராஜேந்திரனை கிழே தள்ளி அரிவாளால் நெற்றியிலும், தலையிலும், வலது கையிலும் வெட்டிவிட்டார். எனது மாமியார் மகேஷ்வரி தேக்கிய போது எதிரி அரிவாளால் இரண்டு கையிலும் வலது கை ஆட்காட்டிவிரலிலும், இடது கை மோதிரவிரலிலும் வெட்டிவிட்டார்.

3. சுப்பிரமணியத்தை எதிரி கிழே பிடித்து தள்ளிவிட்டார் அவருக்குஅடி எதுவும் படவில்லை. நானும், ரவியும், ராஜேந்திரனை குளித்தலை GH க்கு அழைத்துசென்று சிகிச்சையில் சேர்த்தோம். எனது மாமியாரை அவரது மகன் அழைத்து குளித்தலை GH க்கு சென்று சிகிச்சையில் சேர்த்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் அ.சா.பொ.1 அரிவாளால் தான் எதிரி அ.சா.1, அ.சா.2 ஐ வெட்டினார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. சம்பவம் நடந்த அன்றைய தினமே மதியம் 12.30 மணியளவில் குளித்தலை அரசு மருத்துவமனையில் போலிசார் என்னை விசாரித்தார்கள். போலிஸ் விசாரணையின் போது சுடுகாடு அருகே இருநத போது சம்பவம் நடந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சுடுகாட்டிற்கும், சம்பவ இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 500 மீட்டருக்கும் அதிகமாக இருக்கும். இரணடு ஏக்கர் நிலத்திற்கு தூரத்தில் இருந்து பார்த்த போது சம்பவத்தை நான் பார்த்தேன்.

2. சம்பவத்தன்று நான் அங்கில்லை சம்பவத்தை நான் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1, அ.சா.2 எனது மாமனார், மாமியார் என்பதால் நடக்காத சம்பவத்தை நடந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.பொ.1 அரிவாளை அன்றைய தினமே போலிசாரிடம் கொடுத்தேன். சம்பவம் நடந்நதாக சொல்லப்படும் நேரத்தில் எதிரி ரமேஷ் அவரது தகப்பனழருக்கு சொந்தமான இடத்தில் வேலை செய்து கொண்டிருந்த போது அந்த இடத்தை அ.சா.1 , அ.சா.2 சாட்சி–3 அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் எதிரியை தாக்க முற்படும் போது அ.சா.1, அ.சா.2 ஆகியோர் முள்காட்டில் விழுந்து தன்னிச்சையாக காயத்தை ஏற்படுத்தினார்கள் என்றால் சரியல்ல. அ.சா.1 எனது மாமியார் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. நான் எந்த ஒரு சம்பவத்தையும் நேரிடையாக பார்க்கவில்லைஎ ன்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.23 18:16:24 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.